## ① மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி ☒ இடுக.

1. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்று பாடியவர்
(அ) பாரதியார் (ஆ) விபுலாநந்தர் (இ) சோமசுந்தரப்புலவர் (ஈ) பாவேந்தர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. ட் த் ற் இன் ன் என்னும் இடைநிலைகள் உணர்த்தும் காலம்
(அ) எதிர்காலம் (ஆ) நிகழ்காலம் 3) வருங்காலம் (ஈ) இறந்தகாலம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. காலத்தைக் காட்டி நிற்கும் சொல்
(அ) குடிநீர் (ஆ) குடிகள் (இ) குடிக்கிறான் (ஈ) குடித்தல்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. சிங்களஅரசுகள் யாழ்ப்பாணத் தமிழரசுகளுக்குத் திறைசெலுத்திய நூற்றாண்டு
(அ) பத்து (ஆ) பதினொன்று (இ) பதின்மூன்று (ஈ) பதினைந்து
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. யாழ்ப்பாணத் தமிழரசின் கொடி
(அ) மீன்கொடி (ஆ) சிங்கக்கொடி (இ) நந்திக்காடி (ஈ) புலிக்கொடி
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. ஆழமறியாமல் எதை விடாதே
(அ) தலையை (ஆ) கையை (இ) காலை (ஈ) கண்ணை
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. பெயர்ச்சொல்லின் வகைகள்
(அ) இரண்டு (ஆ) ஐந்து (இ) மூன்று (ஈ) ஆறு
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. முள் + பற்றை என்னும் சொற்களைச் சேர்த்து எழுதினால்
(அ) முட்பற்றை (ஆ) முள்பற்றை (இ) முள்ளும்பற்றை (ஈ) முழுப்பற்றை
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. 950 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்
(அ) தொள்ளாயிரத்தைம்பது (ஆ) தொண்ணூற்றுஅம்பது
(இ) தொண்ணூற்றம்பது (ஈ) தொண்ணுற்றம்பது
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. உழவர் என்போர்
(அ) வணிகம் செய்வோர் (ஆ) பயிர்த்தொழில் செய்வோர்
(இ) வண்டி ஓட்டுவோர் (ஈ) கப்பல் செலுத்துவோர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. பச்சை, நீலம், இனிப்பு, வட்டம் என்பன அடங்கும் பெயர்ச்சொல்லின் வகை
(அ) குணப்பெயர் (ஆ) சினைப்பெயர் (இ) காலப்பெயர் (ஈ) இடப்பெயர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன்
(அ) பண்டாரவன்னியன் (ஆ) சங்கிலியன் (இ) மாகன் (ஈ) பாண்டியன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. உயிரைக்காட்டினும் மானமே பெரிதென எண்ணி உயிர்நீத்த மன்னன்
(அ) செங்குட்டுவன் (ஆ) கரிகாலன்
(இ) கணைக்கால் இரும்பொறை (ஈ) குமணன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. **உண்பான்** என்ற சொல்லின் சொற்பிரிப்பு
(அ) உண் + பான் (ஆ) உண் + ப் + ஆன்
(இ)உண்பா + ன் (ஈ) உண்பு + ஆன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. முன்னிலை இடத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு
(அ) நீர் (ஆ) அவர்கள் (இ) நான் (ஈ) நாங்கள்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. **கால்கைபிடித்தல்** என்பதன் பொருள்
(அ) கால்கை வருடுதல் (ஆ) வசியப்படுத்துதல்
(இ) மன்றாடுதல் (ஈ) உதவிகேட்டல்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. பயனிலைச் சொல்லுடன் யாரை? எதை? எவற்றை? என்பவற்றுள் ஏதாவது ஒரு வினாச்சொல்லைச் சேர்த்து வினவினால் வரும் விடை
(அ) பயனிலை (ஆ) எழுவாய் (இ) வினைமுற்று (ஈ) செயற்படுபொருள்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. பல பயன்களைத் தருவதால் நாம் நன்கு பேணவேண்டிய விலங்கு
(அ) அரிமா (ஆ) வரிக்குதிரை (இ) பசு (ஈ) ஒட்டகச்சிவிங்கி
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. **'புனல்'** என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துடைய சொல்
(அ) அனல் (ஆ) நீர் (இ) சேறு (ஈ) வளி
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. செய்வதற்கு அரியவற்றைச் செய்பவர்
(அ) சிறியர் (ஆ) சிறுவர் (இ) பெரியர் (ஈ) செய்வோர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

21. வெட்டிமனிதர் என்பவர்
(அ) வேலைசெல்வோர் (ஆ) வணிகர்
(இ)வீண்பேச்சுப் பேசுவோர் (ஈ)அறிவுரை கூறுவோர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

22. **ஈழம்** என்பது
(அ) மாலைதீவு (ஆ) இந்தோனேசியா (இ) இலங்கை (ஈ) இந்தியா
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

23. அறுவடைசெய்யும் போது பாடப்படும் பாடல்
(அ) ஏர்பாட்டு (ஆ) தாலாட்டு (இ) சினிமாப்பாடல் (ஈ) அறுவடைப்பாடல்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

24. உள்ளத்தினின்று வெளிப்படும் பண்பட்ட இயல்பு
(அ) உளவியல் (ஆ) பண்பாடு (இ) உறவு (ஈ) சிறப்பு
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

25. மனிதன், தேவர் என்போர்
(அ) உயர்திணை (ஆ) அ.்.றிணை (இ) வினைச்சொல் (ஈ) பல்திணை
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

26. மாமன்னன் எல்லாளன் கட்டிய குளம்
(அ) இரணைமடுக்குளம் (ஆ) பாவற்குளம்
(இ) வவுனிக்குளம் (ஈ) கல்மடுக்குளம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

27. "பட்டினி கிடந்து பசியால் மெலிந்தாலும்" என்று பாடியவர்
(அ) ஔவையார் (ஆ) திருவள்ளுவர் (இ) பாரதியார் (ஈ) காசியானந்தன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

28. சொல்லியத்தில் கருத்தை முடிக்கு சொல்
(அ) செயப்படுபொருள் (ஆ) எழுவாய் (இ) பயனிலை (ஈ) வினையெச்சம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

29. கலாசாரப் பண்பு நிறைந்த கொண்டாட்டம்
(அ) திருமணம் (ஆ) தீபாவளி (இ) தைப்பொங்கல் (ஈ) நத்தார்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

30. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி
(அ) நாகரிகம் (ஆ) பண்பாடு (இ) கொண்டாட்டம் (ஈ) கலைகள்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

(30 புள்ளிகள்)

**② கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.**
**(கூத்தாடிக்கு, புணர்ச்சி, வினா, தமிழ்மொழியின், ஆடிவரும்)**

1. நோயிலிருந்து நுடங்கி விழுந்தாலும் தாயில் இனிய ______________ துயர்தாங்க மறப்பேனா?
2. சிறையினுள் பூட்டி வதைத்தாலும் செங்களம் ______________ புகழோடு சிரிக்க மறப்பேனா?
3. ஊர் இரண்டுபட்டால்____________ க் கொண்டாட்டம்.
4. ஒரு விடையைப் பெறும் நோக்குடன் கேட்கப்படுவது __________________ச் சொல்லியம்.
5. ____________ என்பது சொற்கள் பொருத்தமுற ஒன்று சேர்வதாகும்.

(05 புள்ளிகள்)

**③ தமிழ் மொழியிலுள்ள பந்தியை வாசித்து, வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நான் என் குடுப்பத்துடன் எங்கள் தாயகமான தமிழீழத்துக்குச் சென்றிருந்தேன். கடல் சூழ்ந்த சிறிய தீவில் அமைந்திருக்கும் அந்தத் தேசத்தில்தான் என் பெற்றோரின் உறவுகள் வாழ்கின்றனர். 2009ஆம் ஆண்டுக்குப் பின் அமைதி வந்துவிட்டதென பற்பலர் கூறினாலும், அப்பம்மாவின் பேச்சுக்கிடையில் வந்த பெருமூச்சு அங்கு உள்ளவரின் அமைதியற்ற வாழ்வை உணர்த்திற்று....?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(10 புள்ளிகள்)

**④ அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொல்லிலிருந்து சரியான முடிக்கும் சொல்லை எழுதி சொல்லியத்தை நிறைவு செய்க.**

1. உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவார்____________________ (உயர்)
2. யாழ்ப்பாணத் தமிழரசு நான்கு நூற்றாண்டு நிலைத்து__________________ (நில்)
3. ஊற்றுநீர் சிறிதளவானாலும் உயிரினங்களுக்குப் ____________________ (பயன்)
4. உருவத்தைப் பார்த்து எடைபோடாதே! ஏனெனில், சிறிய மகிழம்பூ பெரிதும் மணம் ____________________(வீசு)
5. எப்போதும் குறிக்கோளை உயர்வாகக் கொண்டிருந்தால் ________________________(முன்)

(05 புள்ளிகள்)

## ⑤ ஏழு வினாக்களில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ஒரு செய்தியை அல்லது உண்மையைக் கூறும் சொல்லியம் எவ்வாறு அழைக்கப்படும்?

____________________

____________________

2. **எழுதினோம்** என்ற சொல்லில் இடம்பெறும் திணை, பால், எண் என்பவற்றை எதுக.

(அ) திணை: ____________________

(ஆ) பால்: ____________________

(இ) எண் ____________________

3. பண்பாடு என்றால் என்ன?

____________________

____________________

4. மூடஆமை என்ற பாடற்கதை கூறும் அறிவுரை என்ன?

____________________

____________________

5. இலங்கை விடுதலை பெற்றபின் சிங்கள அரசுகளால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் மூன்று தருக?

____________________

____________________

____________________

6. வீட்டுத்தோட்டத்தால் நாம் அடையக்கூடிய பயன்கள் மூன்று தருக?

____________________

____________________

____________________

7. நாட்டார் பாடல்கள் என்றால் என்ன? அவை எந்த நிகழ்வுகளில் பாடப்படுகின்றன?

____________________

____________________

(10 புள்ளிகள்)

## ⑥ பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

யாழ்ப்பாணம்

இன்று பொதுவாக யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகிற யாழ்குடாநாடு, காலத்துக்குக் காலம் ஏதோ கரணியங்களால் (காரணம்) வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்தது. புத்தருடைய காலத்துக்கு முன்பு அல்லது சமகாலத்தில் சம்புகோளம் என அழைக்கப்பெற்றது. சம்பு என்றால் நாவல். நாவல் மரங்கள் குடாநாட்டில் அதிகம் காணப்பட்டதால் இப்பெயர் வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. நாவல் என்ற பெயரடியைக் கொண்ட ஊர்கள் அங்கு இன்றுமுள்ளன. புத்தரின் ஈழவருகை பற்றிய செய்திகளில் அது நாகதீபம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அக்காலத்தில் யாழ்குடாவையும் வன்னியையும் நாகர் என்ற இனத்தார் ஆண்டதால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. யாழ்ப்பாணம் (யாழ்பாடி) காடு திருத்திக் கழனிகளாக்கி அப்பகுதியை ஆண்டான். அன்றிலிருந்து யாழ்ப்பாணம் ஆயிற்று என்பர்.

1. சம்பு என்பதன் பொருள் யாது?

______________________________________________

______________________________________________

2. புத்தரின் ஈழவருகை பற்றிய செய்திகளில் யாழ்ப்பாணம் எவ்வாறு அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது?

______________________________________________

______________________________________________

3. அக்காலத்தில் யாழ்குடாவையும் வன்னியையும் எந்த இனத்தார் ஆண்டனர்?

______________________________________________

______________________________________________

4. யாழ்குடா நாட்டில் அதிகம் காணப்பட்ட மரம் எது?

______________________________________________

______________________________________________

5. எக்கரணியத்தால் யாழ்ப்பாணம் என்ற பெயர் உருவாயிற்று?

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்

⑦ பாடலைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனது வழியாகும்

அறிவின் கடலைக் கடைந்தவனாம்
அமிர்தம் திருக்குறள் அடைந்தவனாம்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்தவனாம்

1. தமிழனது வழி என்ன?

___

___

2. இப்பாடலில் கூறப்படும் அறநூல் யாது?

___

___

3. தமிழனுடைய மொழி எத்தகையது?

___

___

4. இப்பாடலில் அமிர்தத்தை எதற்கு ஒப்பிடுகிறார்?

___

___

5. இப்பாடலுக்கு ஒரு தலையங்கம் இடுக.

___

___

(10 புள்ளிகள்)

**⑧ தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் நூறு (100) சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**1.** நான் விரும்பும் நாடு

நாட்டின் அழகு
பாதுகாப்பு
பொருளாதாரம்
வாழ்வாதாரம்
கல்விநிலை

**2.** தமிழர் பண்பாடு

பண்பாடு – நாகரிகம்
விழுமியங்கள்
- மானம்
- கொடை
- ஒழுக்கம்
- வீரம்

**3.** மாமன்னன் எல்லாளன்

ஆண்ட காலம்
பண்புகள்
ஆட்சியின் தன்மை (சிறப்பு)
துட்டகெமுனுவுடனான போர்
போருக்கான முழக்கம்
எதிரியின் போர் முறைமைக் கேடு
போற்றுதல்.

**4.** தொடர்பாடல்

நன்மைகள்
- கல்வி, உலகச்செய்தி, அறிவியல் அறிவு, விளையாட்டு, பொழுதுபோக்கு, கலைகள்

தீமைகள்
- கல்வி, உடல்நலம், உளநலம் கெடுதல்
- தவறான விளம்பரங்களும் பரப்புரைகளும்

தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துகின்றவர்களின் இயல்பைப் பொறுத்தே நன்மையும் தீமையும் விளையும்.

(20 புள்ளிகள்)